# சுவாமி விபுலாநந்தரின் சமூகப் பணிகள்

கிழக்கிலங்கையிலே வங்கக் கடல் கிழக்காகவும், மருத நிலம் மேற்காகவும் அமைந்த அழகிய கிராமம் காரைதீவு. இக்கிராமம், தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்த பெருநிதியம் சுவாமி விபுலாநந்தர் ஆவார். அவர் உலகின் முதல் தமிழப் பேராசிரியரும், ஈழம் முதல் இமயம் வரை புகழ் பரப்பிய இசைத்தமிழ் ஆய்வாளரும் ஆவார்.

சுவாமி விபுலாநந்தரின் சமூகம் சார்ந்த தெளிவான சிந்தனையும், அர்ப்பணிப்பும், ஆர்வமும், ஆணித்தரமான முடிவுகளும், மேற்கொண்ட பணிகளும் எம்மை மலைக்கவைக்கின்றன. சமூக முன்னேற்றத்துக்காகச் சுவாமிகள் தமது வாழ்வை அர்ப்பணித்தவர் எனில் மிகையாகாது.

சுவாமிகள் சமூக சேவையில் ஈடுபடுவதற்கு, இளமையில் அவர் பெற்ற கல்வியும், புனித மிக்கேல் கல்லூரியில் பெற்ற அனுபவங்களும், மட்டக்களப்பின் அன்றைய சூழலும், இராமகிருஷ்ண சங்கத் துறவிகளின் தொடர்பும் காரணமாக அமைந்தன.

சுவாமி விபுலாநந்தரின் சமூகம் பற்றிய சிந்தனையானது, சாதி, மத, வருணபேதங்கள் இல்லாத, பிரிவினையற்ற ஒரே தன்மையான சமூகமாகவே இருந்தது. அத்தகையதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக தம்வாழ்நாள் முழுவதும் கடுமையாக உழைத்தார். அவரது சமூகப் பணிகளில் முதன்மையானது கல்விப்பணியாகும்.

இராமகிருஷ்ண சங்க பாடசாலைகளை மேற்பார்வை செய்து கொண்டு, ஏழை மாணவர்களுக்கு கல்வியறிவு ஊட்டும் நோக்குடன், இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகம், ஆகிய பிரதேசங்களில் புதிய பாடசாலைகளை அமைத்தார். அனாதைச் சிறுவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும், மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயத்திலும், சாரதா வித்தியாலயத்திலும் மாணவர் விடுதிகளை நிறுவினார்.

மேலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய போது, திருவேட்களகத்தில் ஒடுக்கப்பட்ட ஆதிதிராவிடர்கள் வாழ்ந்த, சேரிப்பகுதிச் சிறுவர்களும், வளந்தோறும் கல்வி கற்பதற்காகப் பாலர் பாடசாலையையும், இரவுப் பாடசாலையையும் அமைத்துக் கொடுத்தார். அவர்களைத் தனது இல்லத்துக்கு அழைத்து உணவும் வழங்கினார். அத்துடன் யாழ்ப்பாணத்தில் புனித சம்பத்திசிரியார் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மீனவசமூகத்தின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்டவராவார்.

‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’ என்ற பரந்த சமூக நோக்குடன் எண்ணற்ற சமூகப் பணிகளை ஆற்றிய சுவாமி விபுலாநந்தரை நாமும் பின்பற்றுவோம் வாரீர் !

நன்றி, வணக்கம்.